அ.வ.எண்: 32/2021 நாள்: 12.03.2026

வா.சா.1 – கண்ணப்பன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**1,7 12 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள பிள்ளையாரின் பெயர் இடையர் குடியிருப்பு பிள்ளையார் என்றால் சரிதான். கோவில் சொத்து சம்பந்தமாகவோ அல்லது டிரஸ்ட் சம்பந்தமாகவோ நான் ஏதும் பாத்தியத்தை கூறவில்லை என்றால் நிலம் கோவிலுக்கு பாத்தியம் என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே 120/3 சி –ல் கணேசன் கோவில் உள்ளது என்றால் அதில் கணேசன் கோவில் மற்றும் முருகன் கோயில் உள்ளது. அது தனியாருக்கு பாத்தியப்பட்ட இடம் ஆகும். தற்போது தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் 13 மற்றும் 14 பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது. அதற்கு முன்பாக யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் கணேசன் செட்டியார், ஆதிமூலம் செட்டியார் மற்றும் வீரப்பன் ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக இருந்தது. ஏற்கனவே இருந்த கூட்டு பட்டா தாரர்கள் ஆன ஆதிமூலம் செட்டியார், கணேசன் செட்டியார் மற்றும் வீரப்பன் ஆகியோரின் வாரிசுகளிடம் இருந்து தான் பிரதிவாதிகள் தாவாசொத்தை கிரையம் பெற்று பட்டா மாற்றம் செய்துள்ளனர் என்றால் சரிதான்.

2. மேற்படி கூட்டு பட்டா ஏற்பட்ட விபரம் எப்பொழுது தெரியும் என்றால் 1985 ஆம் ஆண்டு தெரியும். மேற்படி பட்டா ஏற்பட்டது தவறு என்று நானோ எனது கிராமத்தார்களோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எஸ்.எல்.ஆர் ஆவணத்தில் என்ன சர்வே எண் காட்டப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. நான் தற்போது எந்த சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால், 125/14 எ இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி இடத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் சர்வே எண் 125/14 மொத்த விஸ்தீரணம் 13 ½ சென்ட் ஆகும். மேற்படி சர்வே எண் 125/14 என்னென்ன உட்பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவாசொத்தின் குறிப்பில் அடித்தல் செய்யப்பட்டு மேல் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் என்னால் அதை படிக்க முடியவில்லை.

3. தற்போது தாவா சொத்தில் நிரந்தர கட்டுமானங்கள் உள்ளதா என்றால் இல்லை, காலி இடமாக தான் உள்ளது.வழக்கு தாக்கல் செய்யும் பொழுதும் காலியிடமாக தான் இருந்தது என்றால் சரிதான். கோவிலே இல்லாத இடத்திற்கு பக்தர்கள் என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்திருப்பதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று

சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிள்ளையார் கோவிலுக்கு ஒதுக்கப்பட்டது என்பதற்கான எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. சாத்தப்பன் செட்டியாரின் தந்தை பெயர் என்னவென்றால் குட்டையன் செட்டியார் ஆகும். தற்கால ட்ரஷ்டியாக மேற்படி குட்டையன் செட்டியார் தான் உள்ளார் என்றால் சரிதான். நான் எஸ்.எல்.ஆர். ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கு அப்படியே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் இடையர் குடியிருப்பு என்று வரவில்லை என்றால் சரிதான், முப்பையூர் குரூப் என்று தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் கோவில் காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

4. எனது பிராதிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ கோவிலை இடித்து விட்டார்கள் என்றும், அதிலிருந்து சிலையை எடுத்துச் சென்று விட்டார்கள் என்ற விபரத்தையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை 13 மற்றும் 14 பிரதிவாதிகள் முறையாக 13/4/2017 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தேர்தல் காலத்தில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக பிரதிவாதிகளுக்கு வேண்டாத நபர்களின் தூண்டுதலின் பெயரில் வாதிகளுடன் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எத்தனை ஆண்டுகளாக தாவா சொத்தில்

பிள்ளையார் இல்லை என்றால் சுமார் 20 ஆண்டுகளாக இல்லை. காலியிடமாகத்தான் இருந்தது. அதிலிருந்த கருவேலை மரங்களை ஏற்கனவே இருந்த கூட்டு பட்டா தாரர்களின் வாரிசுகள் அப்புறப்படுத்தி வந்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

15 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜரராகததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.12 16:22:17 +0530